KAYALPATTINAM MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 27.04.2012

| Date of the Council Meeting | Decision Number | Subject of the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| 27.04.2012 | 211 | **பொருள் எண் 1**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொதுமக்களின் வேலைகளை உடனடியாக முடிக்கும் பொருட்டு இரண்டாம் நிலை நகராட்சினயாக தரம் உயர்த்தப்பட்டுள்ள நமது நகராட்சிக்கு அதற்கேற்ப பணியாளர்கள் நியமனம் செய்யும் பொருட்டு தீர்மானம் நிறைவேற்றிடவும், மேலும் தெருவிளக்கு பிரச்சினைகளை உடனுக்குடன் களையும் பொருட்டு மின்பணியாளர்கள் பணியிடம் ஏற்படுத்திட அல்லது தெரு விளக்கு பணிகளை தனியார் வசம் ஒப்படைக்கும் பொருட்டு ஆலோசனை மேற்கொள்ளவும் கேட்டுக் கொண்ட 9-வது வார்டு உறுப்பினர் திருமதி.ஹைறிய்யா அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>பார்வையிட்டு மன்றம் முடிவு செய்யலாம். | பொருள் எண் 1<br>1.காயல்பட்டணம் நகராட்சியின் அனுமதிக்கப்பட்டுள்ள பொறுப்புகளில் காலியாக உள்ள இடங்களுக்கு பணியாட்களை உடனடியாக நியமனம் செய்ய மன்றம் அனுமதி வழங்குகிறது<br>2. இரண்டாம் நிலை நகராட்சியான காயல்பட்டணம் நகராட்சிக்கு தேவைப்படும் பணியாட்கள் பொறுப்புகளை நியமனம் செய்து அப்பொறுப்புகளை உருவாக்க தமிழக அரசினை கேட்டு கொள்வது என முடிவு செய்யப்பட்டது<br>3. நகராட்சியின் பணிகளுக்கு உடனடியாக தேவைப்படும் பணியாளர்களை தற்காலிகமாக நியமனம் செய்ய நகராட்சி நிர்வாக துறையின் ஒப்புதலை பெற மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 212 | **பொருள் எண்: 2**<br>காயல்பட்டணம் நகராட்சி சிவன் கோவில் தெரு பகுதியான பாக்கர் காலனிக்கு சாலை வசதி அமைத்து தரவும், சீதக்காதி நகர் மேல்புறத்தில் தெரு விளக்கு இல்லாத மின் கம்பங்களில் தெரு விளக்கு அமைத்து தரவும், பழுதடைந்துள்ள வால்வுத் தொட்டிகளை சீர் செய்துதரவும், சிவன் கோவில் தெருவிலும், சீதக்காதி நகரிலும் முற்செடிகள் வளர்ந்து போக்குவரத்திற்கு இடைஞ்சலாக உள்ளது அதனை அகற்றவும், குடிநீர் விநியோக நேரத்தினை முன்கூட்டியே வார்டு உறுப்பினர்களுக்கு தெரிவிக்க ஆவண செய்யுமாறும் கேட்டுக் கொண்ட 15-வாது வார்டு உறுப்பினர் திரு.K.ஜமால் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>பார்வையிட்டு மன்றத்தின் முடிவிற்கு. | பொருள் எண் 2<br>அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது |
| | 213 | **பொருள் எண்: 3**<br>காயல்பட்டணம் நகராட்சி 18-வது வார்டுக்குட்பட்ட பகுதி கோமான் புதூரில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் உள்ள குழாய் பாதியில் துரு பிடித்துள்தால் மேல் நிலை நீர் தேக்க தொட்டியில் குடிநீர் முழு கொள்ளளவு நிரம்புவதில்லை, எனவே உடைந்த குழாயினை மாற்றிடவும், கோமான் புதூர் முதல் முத்தாரம்மன் கோவில் தெரு வரையுள்ள சிமெண்ட் சாலையில் ஓரங்களில் உள்ள பள்ளத்தை 60 சதவீதம் வரை நிரப்பியுள்ளனர் மீதி 40 சதவீத பாகத்தினை உடனடியாக நிரப்பித்தரும்படியும், முத்தாரம்மன் கோவில் தெரு குலாம் சாகிபு தம்பி தோட்டம் ரோட்டில் குடிநீர் குழாய் பழுதுபட்டு சாலையில் தண்ணீர் தேங்கும் காரணத்தினால் சாலையினை தோண்டி குழாயினை பழுது நீக்கம் செய்து தரும்படியும், கோமான் புதூர் தென்வடித்தில் உள்ள மண் சாலையினை தார் சாலையாக மாற்றித்தறுமாறு கேட்டுக் கொண்ட 18-வது வார்டு உறுப்பினர் திரு.E.M.சாமி அவர்களின் கடிதம் மன்றத்தீன் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>நகர்மன்ற தலைவர், நகர்மன்ற உறுப்பினர், ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோருடன் இடம் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி தேர்வு செய்து நகராட்சி நிதிநிலைக்கேற்ப பணி செய்ய மன்ற ஒப்புதல் வழங்கலாம். | பொருள் எண் 3<br>அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 214 | **பொருள் எண்: 4**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பணியிடங்கள் பல மாதங்களாக காலியாக இருப்பதால் சேவைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள முழு நேரப் பணியாளர்கள் பணியில் அமர்த்தப்படும் வரை தற்காலிய அடிப்படையில் ஒப்பந்த பணியாளர்களை பணியில் அமர்த்த ஒப்பந்த புள்ளிகள் கோர நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | பொருள் எண் 4<br>முழுநேரப்பணியாளர்கள் பணியில் அமர்த்தப்படும் வரை தற்காலிக அடிப்படையில் ஒப்பநத பணியாளர்களை பணியில் அமர்த்த ஒப்பந்த புள்ளிகள் கோரலாம். கீழ்காணும் பணிகளுக்கு ஓர் அண்டு வரை பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க நகராட்சி நிர்வாக துறையின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோர மன்றம் அனுமதி வழங்குகிறது. ஓர் ஆண்டின் முடிவில் மன்றத்தின் அனுமதி பெற்று தற்காலிக பணியாட்களின் பணி நாட்களை நீட்டிக்க மன்றம் அனுமதி வழங்குகிறது<br>1.மக்கள் சேவை மைய பணியாளர்-1<br>2. வயர்மேன் -2<br>3. குடிநீர் விநியோக உதவியாளர்-2<br>4. கணிணி பொறியாளர்-1 |
| | 215 | **பொருள் எண் 5**<br>காயல்பட்டணம் நகராட்சிப் பகுதி 5-வது வார்டுக்குட்பட்ட ஆறாம் பள்ளி தெரு மின்கம்பம் எண்:-SS10, W16, 149-க்கும் மின் கம்பம் எண்:-SS11 W17 150-க்கும் இடையில் போதிய வெளிச்சம் இல்லாத காரணத்தினால் அப்பகுதியில் ஒரு மின் கம்பம் நிறுவி மின் விளக்கு அமைத்து தரும்படி கேட்டுக் கொண்ட 5-வது வார்டு உறுப்பினர் திரு.ஜஹாங்கீர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>நகர்மன்ற தலைவர் நகர்மன்ற உறுப்பினர் ஆகியோருடன் இடம் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி தேர்வு செய்து நகராட்சி நிதிநிலைக்கேற்ப பணி செய்ய மன்ற ஒப்புதல் வழங்கலாம். | பொருள் எண் 5<br><br>நகர்மன்ற தலைவர் உறுப்பினர் ஆகியோருடன் இடம் பார்வையிட்டு விதிமுறைகளின் அடிப்படையில் பணி தேர்வ செய்ய மன்றம் அனுமதி வழங்குகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | 216 | **பொருள் எண் 6**<br>காயல்பட்டணம் நகராட்சி 4-வது வார்டு பகுதி சாலைகளில் கிடக்கும் மணல்களை அப்புறப்படுத்திடவும், குடிநீர் விநியோகம் செய்யும் நேரத்தினை வார்டு உறுப்பினர்களிடம் முன் அறிவிப்பு செய்திடவும், சிறுநெய்னார் பள்ளி, அகமது நெய்னார் பள்ளி அருகில் போக்குவரத்து அதிகாமாக உள்ள காரணத்தினால் விபத்து ஏதும் ஏற்படா வண்ணம் அப்பகுதிகளில் வேகத்தடை அமைத்தது தரவும் கேட்டுக் கொண்ட 4-வது வார்டு உறுப்பினர் திருமதி.ஏ.டி.முத்து ஹாஜரா அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>நகர்மன்ற தலைவர் நகர்மன்ற உறுப்பினர் ஆகியோருடன் இடம் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி தேர்வு செய்து நகராட்சி நிதிநிலைக்கேற்ப பணி செய்ய மன்ற ஒப்புதல் வழங்கலாம். | பொருள் எண் 6<br>அலுவலக குறிப்பு<br>ஏற்றுக்கொள்ளப்பட்டு<br>தீர்மானிக்கப்பட்டது |
| | 217 | **பொருள் எண் 7**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் கட்டிட வரைபடம் வரைவாளர் அனுமதி வேண்டி விண்ணப்பித்துள்ள திரு.ஜெ.தங்கலிங்கம் என்பவரின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | பொருள் எண் 7<br>அலுவலக குறிப்பு ஏற்றுக்<br>கொள்ளப்பட்டு மன்றம் அனுமதி<br>வழங்கியது |
| | 218 | **பொருள் எண் 8**<br>காயல்பட்டணம் நகராட்சி 2012-13-க்கு பொது சுகாதார பணிக்கு தேவையான தளவாட சாமான்கள் வாங்கிட உத்தேச செலவினம் தொகை ரூ. 80,000-த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | பொருள் எண் 8<br>சுகாதார பணிக்கு தேவையான<br>தளவாட சாமான்கள் வாங்கிட<br>முறையான ஒப்பந்தபுள்ளிகள் பெற்று<br>குறைவான விலைபுள்ளியினை<br>அனுமதித்திட மன்றம் அனுமதி<br>வழங்கியது |

| | | | |
|---|---|---|---|
| | 219 | பொருள்எண் 9<br>நமது நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தினை 1996 ஆம் ஆண்டு அப்போதைய இப்போதைய முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்கள் அப்போது பேருந்து நிலைய சுவற்றிலிருந்தகல்வெட்டு தற்போது இல்லை எனவே மீண்டும் அக்கல்வெட்டினை மக்கள் பார்வைக்காக பேருந்து நிலையத்தில் பொருத்தமான இடத்தில் வைக்க கேட்டு கொண்ட 13 வது வார்டு உறுப்பினர் திரு.எம்.எஸ்.எம்.சம்சுதீன் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்<br>அலுவலக குறிப்பு<br>பார்வையிட்டு மன்றத்தின் முடிவிற்கு | உறுப்பினரின் கோரிக்கை குறித்து ஆவணங்களின் அடிப்படையில் முடிவெடுக்க மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 220 | **பொருள் எண் 10**<br>**காயல்பட்டணம் நகராட்சியின் பகுதி 1-வது வார்டு கீழ்தெருவில் கீழ்ப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் சரியாக வராத காரணத்தினால் சுமார் 200 அடி நீளத்திற்கு பி.வி.சி குழாய் அமைத்து வால்வு பொருத்தி குடிநீர் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்ய கேட்டு கொண்ட 1-வது வார்டு உறுப்பினர் திரு.எ.லுக்மான் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்**<br>**அலுவலக குறிப்பு**<br>**நகர்மன்ற தலைவர் நகர்மன்ற உறுப்பினர் ஆகியோருடன் இடம் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி தேர்வு செய்து நகராட்சி நிதிநிலைக்கேற்ப பணி செய்ய மன்றம் ஒப்புதல் வழங்கலாம்** | பொருள் எண் 10<br>அலுவலக குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது |
| | 221 | **பொருள் எண் 11**<br>**பொது சுகாதார பிரிவின் மூலம் நகரில் மழைக்காலங்களில் தேங்கி நிற்கும் தண்ணீரின் மூலம் உற்பத்தியாகும் கொசுவினை கட்டுப்படுத்தும் பொருட்டு இரண்டு புகை மருந்து அடிக்கும் கருவி வாங்க உத்தேச ரூ.1.40 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது**<br>**அலுவலக குறிப்பு**<br>**மன்றம் அனுமதி வழங்கலாம்** | பொருள் எண் 11<br>மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 222 | **பொருள் எண் 12**<br>**பொதுசுகாதார பிரிவில் உள்ள தண்ணீர் வண்டி HMT 1811 தெருக்களுக்கு பொது நிகழ்ச்சிகளுக்கும் பள்ளி வாசல்களுக்கும் விழாக்களுக்கும் தண்ணீர் கொடுக்க வேண்டியது இருப்பதாலும் அதனை பழுது பார்க்க உத்தேச மதிப்பீடு ரூ.65.000-த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது** | பொருள் எண் 12<br>மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 223 | **பொருள் எண் 13**<br>**தமிழக அரசு காயல்பட்டிணத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசாணை பிறப்பித்துள்ளது. Directorate of Public health and preventive medicine என்ற அரசமைப்பு சுகாதார நிலையத்தை கட்டுவதற்காக நகராட்சிக்கு சொந்தமான இடம் கேட்டிருந்தது. இதற்கு தேவையான இடம் பொதுமக்களிடம் இருந்து பெறுவதற்காக அறிவிப்பு வெளியிடப்பட்டு இது குறித்த பரிந்துரைகள் கோமான மொட்டையர் ஜமாஅத்தில் இருந்தும் அப்பாபள்ளி ஜமாஅத்தில் இருந்தும் பெறப்பட்டுள்ளது. மேலும் வார்டு 13 உறுப்பினர் எம்.எஸ்.எம்.சம்சுதீன் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய வளாகத்தில் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு பின்புறம் காலியாகயுள்ள இடத்தில் சுமார் 35 சென்ட் இடம் ஒதுக்கீடு செய்து ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க பரிந்துரைத்துள்ளார். பெறப்பட்ட பரிந்துரைகள் குறித்து நகர்மன்ற தலைவரின் கடிதம் மன்றத்தின் பரிந்துரைக்கு**<br>**அலுவலக குறிப்பு**<br>**மன்றம் பரிசீலித்து பரிந்துரைக்கலாம்** | பொருள் எண் 13<br><br>ஆரம்ப சுகாதார நிலையம் கோமான் மொட்டையார் ஜமாஅத் தர சம்மதித்துள்ள நிலத்தில் அமைய பெருவாரியான உறுப்பினர்கள் தெரிவித்துள்ள விருப்பத்தினை சம்பந்தப்பட்ட துறைக்கு தெரிவித்திட மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 224 | **பொருள் எண் 14**<br>**காயல்பட்டணம் நகராட்சி பொறியாளர் பிரிவு மற்றும் கணிணி பிரிவு கணிப்பொறிகளுக்கு வைரஸ் மென்பொருள் (Antivirus Software) போடுவதற்கு ஆகும் செலவினம் ரூ.1400/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**<br>**அலுவலக குறிப்பு**<br>**மன்றம் அனுமதி வழங்கலாம்** | பொருள் எண் 14<br>மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 225 | **பொருள் எண் 15**<br>**காயல்பட்டணம் நகராட்சி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக மேல ஆத்தூரில் அமைந்துள்ள திட்டம் மூலம் குடிநீர் பெற்று வருகிறது. அவ்வகைக்காக காயல்பட்டணம் நகராட்சி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு பாக்கி வைத்துள்ளது. அப்பாக்கியினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்திட முடிவு செய்வது குறித்து நகர்மன்ற தலைவரின் கடிதம் மன்றத்தின் அனுமதிக்கு**<br>**அலுவலக குறிப்பு**<br>**மன்றம் அனுமதி வழங்கலாம்** | பொருள் எண் 15<br>காயல்பட்டணம் நகராட்சி தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியத்திற்கு வைத்துள்ள பாக்கியினை செலுத்திட மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 226 | **பொருள் எண் 16**<br>**சுமார் ரூ. 30 கோடி மதிப்பில் காயல்பட்டணம் நகராட்சிக்கு இரண்டாம் குடிநீர் விநியோக திட்டம் அமைத்திட நிர்வாக ஒப்புதல் Administrative Sanction பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஓர் பாகமாக நகரில் குடிநீர்** | பொருள் எண் 16<br>இது குறித்த நகர்மன்றக் கோரிக்கையை நகராட்சி நிர்வாகத்துறைக்கு சமர்ப்பிக்க மன்றம் |

| | | | |
|---|---|---|---|
| | | **விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் பைப்புகளையும் விநியோக முறையினையும் புதுப்பித்து சீர் செய்வது இத்திட்டத்தின் பிற பாகங்கள் நிறைவு பெறும் வரை காத்திராமல் போர்கால அடிப்படையில் உடனடியாக உள்ளூர் குடிநீர் விநியோ முறையை சீர் செய்ய ஆவண செய்வது குறித்து நகர்மன்ற தலைவரின் கடிதம் மன்றத்தின் அனுமதிக்கு**<br>**அலுவலக குறிப்பு**<br>**மன்றம் அனுமதி வழங்கலாம்** | அனுமதி வழங்குகிறது |
| | 227 | **பொருளஎண் 17**<br>**சுமார் ரூ.30 கோடி மதிப்பில் காயல்பட்டணம் நகராட்சிக்கு இரண்டாம் குடிநீர் விநியோக திட்டம் அமைத்திட நிர்வாக ஒப்புதல் Administrative Sanction பெறப்பட்டுள்ளது. இதற்காக கடந்த காலங்களில் முயற்சி செய்த அனைத்து நகர்மன்றத்தலைவர்களுக்கும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் அனைத்து அதிகாரிகளுக்கும் பொது நல அமைப்புகளுக்கும் காயல்பட்டணம் நகர்மன்றத்தலைவர் துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சார்பாக வாழ்த்து மற்றும் நன்றி கூறி தீர்மானம் நிறைவேற்றுவது குறித்து நகர்மன்ற தலைவரின் கடிதம் மன்றத்திற்க அனுமதிக்கு**<br>**அலுவலக குறிப்பு**<br>**மன்றம் அனுமதி வழங்கலாம்** | பொருள் எண் 17<br>காயல்பட்டணம் நகராட்சியின் இரண்டாம் குடிநீர் விநியோக திட்டம் அமைந்திட கடந்த காலங்களில் முயற்சி செய்த அனைத்து அரசாங்கங்களுக்கும் நகர்மன்றதலைவர்களுக்கும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் அனைத்து பொது நல அமைப்புகளுக்கும் காயல்பட்டணம் நகர்மன்ற தலைவர் துணைதலைவர் மற்றும் உறுப்பினர்கள் சார்பாக நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது |
| | 228 | **பொருள் எண் 18**<br>காயல்பட்டணம் நகராட்சியினை தணிக்கை தடைகள் இல்லா நகராட்சியாக (Zero Audit Objections Municipality) மாற்றிட நகராட்சி ஆணையர் நகராட்சியின் மூத்த அலுவலர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் வரவு செலவு ஆய்வு கூட்டங்களை இரு மாதங்களுக்கு ஒருமுறை நடத்துவது குறித்து நகர்மன்ற தலைவரின் கடிதம் மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | பொருள் எண் 18<br>மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 229 | பொருள் எண் 19<br>காயல்பட்டணம் நகராட்சிக்கு தேவைப்படும் தெருவிளக்கு உபரி பொருட்களை 95000/- ரூபாய் மதிப்பில் தரமான பொருட்கள் தயாரிக்கும் முன்னணி நிறுவனங்களை நேரடியாக அணுகி ஒப்பந்தப்புள்ளிகளை பெற்று கொள்முதல் செய்வது குறித்து நகர்மன்ற தலைவரின் கடிதம் மன்றத்தின் அனுமதிக்கு<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | பொருள் எண் 19<br>மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 230 | பொருள் எண் 20<br>காயல்பட்டணம் நகராட்சி சம்பந்தமான தணிக்கை தடைகளை அரச ஆணைப்படி நகர்மன்றம் பரிசீலனை செய்து தனது அறிக்கை வழங்க வேண்டும் பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ள தணிக்கை தடைகளால் காயல்பட்டணம் நகராட்சிக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே காயல்பட்டணம் நகராட்சி சம்பந்தமான தணிக்கை தடைகளை ஆய்வு செய்து அவற்றினை நிவர்த்தி செய்ய இரண்டு மாதத்திற்க ஒருமுறை சிறப்பு கூட்டம் நடத்துவது குறித்து நகர்மன்ற தலைவரின் கடிதம் மன்றத்தின் அனுமதிக்கு<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | பொருள் எண் 20<br>மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 231 | பொருள் எண் 21<br>காயல்பட்டணம் நகராட்சி எல்லைகளில் உள்ள காயல்பட்டணம் நகராட்சி அறிவிப்புபலகைகளை புதிதாக பெயிண்ட் கொண்டு எழுதிட 10000/-த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு<br>மன்றம்அனுமதிவழங்கலாம் | பொருள் எண் 21<br>மன்றம் அனுமதி வழங்குகிறது |

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td></td><td>232</td><td>பொருள் எண் 22<br>இரண்டாவது வார்டுக்குட்பட்ட பகுதியில் அதாவது சதுக்கை ஜங்ஷன் ஜலாலியா ஜங்ஷன் அகமது நெய்னார் பள்ளி அருகேயும் வேகத்தடை அமைக்கவும் சதுக்கை தெருவிலிருந்து சேதுராஜா தெருவுக்கு போகும் சிறிய ரோடும் பெரிய குத்பா பள்ளி ரோடும் கேட்டுகொண்ட இரண்டாவது வார்டு உறுப்பினர் செய்து முகம்மது பாத்திமா அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம்</td><td>பொருள் எண் 22<br>மன்றம் அனுமதி வழங்குகிறது</td></tr>
<tr><td></td><td>233</td><td>பொருள் எண் 23<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொது நிதிப்பணிகள் 2012-13-ல் 24.04.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரபடப்பட்டது அதில் கீழ்கண்ட பணிகளுக்கு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br><table><tr><td>வ.எ ண்</td><td>பணயின்</td><td>ஒப்பந்ததாரரி ன் பெயர்</td><td>மதிப்பீட்டு ரேட்</td></tr><tr><td>1</td><td>சிவன் கோவில் தெரு மயான சாலையில் சிறு பாலம் கட்டுதல்</td><td>திரு.நாகூர்மீர ான்சா, ஏர்வாடி</td><td>மதிப்பீட்டு ரேட்டை விட4.92% கூடுதல்</td></tr><tr><td>2</td><td>கே.எம்.டி.மருத்துவம னை அருகில் உள்ள மழைநீர் வடிகால் ஓடையில் இருபுறமும் (கிழக்கு மற்றும் மேற்கு) தடுப்புச் சுவர் கட்டுதல்</td><td>திரு.நாகூர்மீர ான்சா, ஏர்வாடி.</td><td>மதிப்பீட்டு ரேட்டை விட4.90 %கூடுதல்</td></tr></table></td><td>பொருள் எண் 23<br>ஒப்பந்தப்புள்ளிகள் முறையாக நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டு பெறப்பட்டுள்ளன. மேலும் மதிப்பீட்டு தொகைக்கு 5 சதவீதம் கூடுதல் வரை ஒப்பந்தப்புள்ளிகளை முதல் அழைப்பிலேயே மன்றம் பரிசீலிக்க சம்பந்தப்பட்ட அரசாணை அனுமதி வழங்குகிறது. ஆகவே பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் அடிப்படையில் வரிசை எண் 1 மற்றும் 2 பணிகளை ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்துள்ள திரு.நாகூர் மீரான்சா ஏர்வாடி என்பவருக்கும் வரிசை எண் 3 ல் குறிப்பிட்டுள்ள பணியினை மோகனபிரியா ட்ரேடர்ஸ் மதுரை என்ற நிறுவனத்திற்கும் வழங்க மன்றம் அனுமதி வழங்குகிறது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>3</td><td>நகராட்சி பகுதியில் உள்ள குடிநீர் விநியோகப் பராமரிப்பு பணிக்குத் தேவையான வால்வுகள் சப்ளை செய்தல்</td><td>எஸ்ஸாரெஸ் டிரேடர்ஸ், மதுரை<br><br>மோகன பிரியா டிரேடர்ஸ், மதுரை</td><td>மதிப்பீட்டு ரேட்டை விட 2.21% கூடுதல்<br><br>மதிப்பீட்டு ரேட்டை விட 0.09% குறைவு</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:-<br>
மேற்கண்ட பணிகளில் வரிசை எண்.1 மற்றும் 2 ஆகிய பணிகளுக்கு ஒற்றை ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளதாலும் அதுவும் மதிப்பீடு ரேட்டை விட 4.92% மற்றும் 4.90% அதிகமாக கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட இரு பணிகளுக்கும் இது முதல் அழைப்பாக இருப்பதாலும் மதிப்பீடு ரேட்டை விட அதிகமாக இருப்பதாலும் மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.வரிசை எண் .3 ல் உள்ள பணிக்கு மதிப்பீடு ரேட்டை விட குறைவாக ரேட் கோரியிருப்பதால் அதற்குரிய ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கிகரிக்கலாம்
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>234</td>
<td>பொருள் எண் 24<br>
அரசு ஆணைகள் அனுமதித்துள்ளபடி நகர்மன்ற தலைவருக்கு பிரத்தியேக வாகனம் ஒன்று வாங்க வார்டு 1 உறுப்பினர் ஏ.லுக்மான அவர்கள் அனுப்பியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு<br>
அலுவலகக் குறிப்பு:<br>
மன்றம் அனுமதி வழங்கலாம்</td>
<td>பொருள் எண் 24<br>
நகர்மன்ற தலைவர் அலுவலக பணிகளை மேற்கொள்ள அரசாணைகள் அனுமதித்துள்ள படி வாகனம் வாங்க மன்றம் அனுமதி வழங்குகிறது</td>
</tr>
</table>